# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII, Cr.P.C)
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET

Case No. **SC.No. 4/2025**
Prosecution: **PW- 6**

**Deposition of the witness of LW- 10**

| | | | |
|---|---|---|---|
| **Name** | திரு.கோபால் | **District** | திருவண்ணாமலை |
| **Father's Name** | கணேசன் | **Calling** | காவல் ஆய்வாளர், தூசி காவல் நிலையம் |
| **Age** | 42/2026 | **Religion** | --- |
| **Village/Town** | தூசி | **Caste** | --- |
| **Taluk** | தூசி | **ID Card No.** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of June 2026.

எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் தூசி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.04.2013 ஆம் தேதி இரவு 21.15 மணிக்கு நான் திமிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, சிவசந்திரன் த/பெ மருதமுத்து காயங்களுடன் காவல் நிலையத்திற்கு வந்தவரை மருத்துவமனைக்கு செல்லும்படி மருத்துவ மெமோ எண்.13/2013 கொடுத்து புகார்தாரரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, நானும், அவருடன் ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு சென்று மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். புகார் வாக்குமூலம் **அ.த.சா.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. புகார் வாக்குமூலத்திற்கு ஏற்ப திமிரி காவல் நிலைய குற்ற எண்.154/2013 இதச பிரிவு 379ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையை காவல் ஆய்வாளர் திரு.வி.இ.செந்தில் அவர்களின் பார்வைக்கு வைத்துக்கொண்டேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகார்தாரர் 21.04.2013 ஆம் தேதி இரவு 10.15 மணிக்கு எங்கள் காவல் நிலையத்திற்கு வந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்பது குறித்து புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால், காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நேரம் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது.

2. நான் சொன்ன நேரத்திலோ, சொன்ன நாளிலோ முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், அதனால் தான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யப்பட்ட நேரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

3. முதல் தகவல் அறிக்கை யார் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்பது குறித்து முதல் தகவல் அறிக்கையிலும், வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான், அவ்வாறு குறிப்பிடப்பட வேண்டிய அவசியம் இல்லை.

4. முதல் தகவல் அறிக்கை 23.04.2013 ஆம் தேதி பகல் 11.00 மணிக்கு நீதிமன்றத்தால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் காவல் ஆய்வாளரின் புலன் விசாரணைக்கு பிறகு தான் முதல் தகவல் அறிக்கை 23.04.2013 ஆம் தேதி தாமதமாக பின்னிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. ஆகையால் தான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு கால தாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/- A. Daoudh Ammal
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.